**செ. கு. எண்: 052** **நாள்: 04.06.2019**

## <u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 4.6.2019</u>

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கோலார்பட்டி கிராமம் - தேசிய நெடுஞ்சாலை, கெடுமேடு அருகில், கார் விபத்துக்குள்ளாகி, வாய்க்காலுக்குள் கவிழ்ந்ததில், காரில் பயணம் செய்த கோயம்புத்தூர் தெற்கு வட்டம், மசக்காளிபாளையத்தைச் சேர்ந்த திரு. பிரகாஷ் அவருடைய மனைவி திருமதி சித்ரா அவரது இரண்டு குழந்தைகள் செல்வி. நந்தனா, செல்வி பூஜா மற்றும் திரு. பன்னீர்செல்வம் என்பவரின் மனைவி திருமதி லதா அவருடைய குழந்தைகள் செல்வன் கவியரசு, செல்வி தாரணி மற்றும் திரு. சுப்பிரமணியம் என்பவரின் மனைவி திருமதி சுமதி ஆகிய எட்டு நபர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்தேன்.

சாலை விபத்தில் உயிரிழந்த மேற்கண்ட **எட்டு நபர்களின்** குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட துயரச் சம்பவத்தில் **உயிரிழந்த 8 நபர்களின் குடும்பத்திற்கு தலா இரண்டு லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**